21 ஆகஸ்ட் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 21 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது



மாதாந்திர கருப்பொருள்:
**அன்னை மரியாவின் விண்ணேற்பு விழா (ஆகஸ்ட் 15)**

# இடுக்கமான வாயிலைத் தேர்ந்தெடுங்கள்

இன்றைய முதல் வாசகத்தில் அனைத்து நாடுகளிலிருந்தும் உள்ள மக்களைக் கடவுள் கூட்டிசேர்ப்பார் என்று வாசிக்கின்றோம். அவருக்கு ஏற்ற சாட்சிமிக்க வாழ்க்கை வாழ்வதின் வழியாக உலகெங்கிலும் அவரின் மாட்சியை எடுத்துரைக்க வேண்டும். மக்களின் மத்தியில் அவர் குருக்களையும் லேவியர்களையும் தேர்ந்தெடுப்பார்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

**இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள்.**
**(லூக்கா 13:24)**

இதனுடைய எதிரொலியாக, உலகின் எல்லா இடங்களிலிருந்தும் வந்து கடவுளின் அரசில் அவரின் பந்தியில் அமர்வார்கள் என்று இயேசுவும் அவரைப் பின்பற்றுபவர்களிடம் கூறுகிறார். கடைசியானோர் முதலாவர் என்று இயேசு கூறிய இந்த வார்த்தைகள், இயேசுவின் காலத்திலும், எசாயாவின் காலத்திலும் இருந்தவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்திருக்கும் ஏன் இப்போதும் கூட அது கடினமாகத் தான் இருக்கும்.

ஒருவர் வந்து இயேசுவிடம், சிலர் மட்டுமே மீட்கப்படுவர் என்பது உண்மைதானா என்று கேட்கிறார். இந்த நபர் இயேசுவைப் பின்தொடர்ந்து வந்து அவரின் போதனைகளைச் செவிமடுத்தவராக இருக்கும். அவரைப் பின்பற்றுவது எளிதல்ல என்று அவருக்குத் தோன்றியதால், சிலரே விண்ணகத்தை அடையமுடியும் என்ற முடிவுக்கு அவர் வந்திருக்கக்கூடும். சிலர் மட்டுமே அல்லது பலர் மீட்கப்படுவார்கள் என்பது உண்மையில் நமக்கு முக்கியமா? அப்படி இருந்திருந்தால், இயேசு அதற்குப் பதில் அளித்திருப்பார். இயேசுவின் இன்றையப் போதனை, மீட்பை எவ்வாறு பெறுவது என்பதும், அதன் அவசரத் தேவையுமே ஆகும்.

இயேசு நம்மை இடுக்கமான வாயில் வழியாக நுழையுமாறு சொல்கிறார். இது கடினமானது என்றும் பலர் அதில் நுழைவதில் தோல்வி அடைந்துவிடுவர் என்றும் அவர் ஒப்புக்கொள்கிறார். மேலும் இதில் நுழையமுடியாதவர்கள் யார்? தீயோர்கள் தான். இடுக்கமான வாயில் என்பது நாம் எதைத் தேர்ந்தெடுக்கின்றோம் என்பதையும், நாம் தேர்ந்தெடுக்கும் முடிவுகள் அதற்கான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் குறிக்கிறது. ஒருமுறை மூடிய கதவு மீண்டும் நமக்குத் திறக்காது. வேதனையுடன் நாம் வெளியில் தான் நிற்கவேண்டியிருக்கும்.

“சிறந்ததை செய்யுங்கள்” என்று கூறுகிறார், இயேசு. நாம் நிலைவாழ்வை அடையவேண்டுமென்றால், விண்ணகத்திற்கு நுழைய நாம் கடினமாக முயற்சி செய்யவேண்டும். இதனால், கடவுளின் வாழ்வில் முழுமையாகப் பங்கேற்கமுடியும். அதற்காக, நாம் அவருடையப் போதனைகளை அறிந்து அனுதினமும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

நாம் தடுமாறும் சந்தர்ப்பங்கள் பல இருக்கும், இரண்டாம் வாசகத்தில், நம் கடவுள் ஒரு தகப்பன் தன் குழந்தையைக் கண்டித்துத் திருத்துவதுபோல் நம்மை ஒழுங்குப்படுத்துகிறார் என்று வாசிக்கின்றோம். இயேசுவைப் போல நாம் மாறுவதற்கும், அவரைப் பின்பற்றுவதற்கும் இந்த ஒழுக்கத்தை ஒப்பிடுகிறார். கடவுள் மீண்டும் நம்மை அந்த இடுக்கமான வாயில் அருகே கொண்டுவருகிறார். விரக்தியடைய வேண்டாம், மாறாக, நமது நம்பிக்கையைப் பலப்படுத்தி, ஒருவர் மற்றவரை உயர்த்தவேண்டும். ஒருவர் மற்றவருக்காக கடவுளின் அருளை மன்றாடவேண்டும். ✣

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா: 66: 18-21;
திபா: 117: 1-2;
எபி: 12: 5-7, 11-13;
லூக்: 13: 22-30.

INTERNAL CIRCULATION ONLY
BUL 34/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org